முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ. எண். 99/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | முனுசாமி |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | ஆறுமுகம் |
| வயது | .. | |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | |
| வட்டம் | .. | |

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் நாள் திங்கட்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

நான் அரும்பத்தி கிராமத்தில் வசித்து வருகிறேன். வாதி பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி எனக்கு உறவினர் இல்லை, பழக்க வழக்கம் தான். வாதி என் ஊரில் வந்து செவிலியராக பணிபுரிந்தார், அதனால் பழக்கம். இதேபோன்று மற்றொரு வழக்கு ரோகிணி பச்சையப்பன் மீது வழக்கு தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கும் ரூ.3,50,000/-க்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த பாண்டிலும் நான் தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 04.04.2019 ஆம் தேதி என் முன்பாக பணம் பெற்றுக்கொண்டதாக சாட்சிகளில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல ஏற்கனவே கடன்கொடுக்கும்போது நான் கொடுத்த சூரிட்டியின் அடிப்படையில் தான் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 04.04.2019 கடனுக்கே பிரதிவாதி யார் என்று தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில் மீண்டும் 04.01.2019 அதற்கு

முன்னதாகவே கடன் பெற்றதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி சாட்சி கையெத்து ரோகிணி வீட்டில் வைத்து போட்டேன். அவர் வேலூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ஆவணம் நானும் ரோகிணியும் சேர்ந்து போர்சரியாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் ரூ.3,50,000/- கடன் பெறவில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியத்தை நிராகரிக்க வேண்டும் என்றால் சரியல்ல.